DEPOSITION OF WITNESS
In the court of District Munsif Cum Judicial Magistrate Court, Uthukottai,
DVC . No. 2 of 2024
Prosecution witness: RW - 1

| | |
|---|---|
| Name | திரு. ரமேஷ் |
| Fathers name | திரு. முத்து |
| Village | திருகண்டலம் |
| Age | 51 |

Petitioner called present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.07.2025.

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி நேரம் 11.40

சாட்சியிடம் எதிர்மனுதாரர் மற்றும் ரேவதியின் புகைப்படம் உள்ள கடன் பத்திரத்தின் புகைப்படம் காட்டியபோது சாட்சி அந்த ஆவணத்தை ஒப்புக்கொண்டார். மா.சா.ஆ 7 ஆவணமாக குறியீடு செய்யப்படுகின்றது.(எதிர் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.)

1. என்னுடைய கூற்றுப்படி ரேவதிக்கு விற்பனை செய்த கிரையபத்திரத்தில் சாட்சியாக மனுதாரர் கையொப்பம் செய்துள்ளாரா என்றால் இல்லை. ரேவதிக்கு விற்பனை செய்யும்போது பேச்சு வார்த்தை நடத்தினீர்களா என்றால் பேச்சு வார்த்தை நடத்தினேன். பேச்சு வார்த்தை நடத்தும்போது நான் மற்றும் வாங்கும் நபர் இருவரும் பேச்சு வார்த்தை நடத்தினோம்.

2. 15 லட்சத்திற்கு விற்பனை செய்தார் என்பதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் என்னுடைய வங்கி கணக்கிற்கு பணம் செலுத்தினார். உங்களுக்கும் ரேவதி கூட்டுவங்கி கணக்கு இருக்கிறதா என்றால் இல்லை. இந்தியன் வங்கி பாலவாக்கம் கிளையில் எனக்கு வங்கி கணக்கு உள்ளது அதில் தான் ரேவதி பணம் செலுத்தினார் மேலும் பணமாகவும் கொடுத்தார். எவ்வளவு பணம் வங்கி கணக்கில் கொடுத்தார், எவ்வளவு பணம் கையில் கொடுத்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

3. நீங்கள் ரேவதியுடன் சட்டமுறனாண வகையில் இரண்டாவது திருமணம் செய்துகொண்டு மனுதாரர் அவர்களுக்கு எந்தவிதமான பொருளுதவியும் செய்யாமல் நிராகரிப்பு செய்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல. சொத்து எல்லாம் கீதா பெயரில்

தான் வாங்கியுள்ளார். ரேவதி உடைய கிரையபத்திரத்தில் நீங்கள் ரேவதி கணவர் என்று குறிப்பிட்டு உள்ளீர்கள் என்றால் சரியல்ல.

4. மனுதாரர்க்கு நீங்கள் எந்தவிதமான பாராமரிப்பும் செய்யவில்லை என்றால் சொத்து அவர்கள் பெயரில் தான் உள்ளது. அசையா சொத்துக்களின் அசல் ஆவணங்கள் மற்றும் எதிருரையில் சொல்லப்பட்டுள்ள நகைகள் அனைத்தும் என்னிடம் தான் உள்ளது என்றால் அனைத்தும் மனுதாரரிடம் தான் உள்ளது. அசையா சொத்துக்களில் எந்தவிதமான வருமாணமும் மனுதாரர்க்கு வரவில்லை என்றால் சரியல்ல.

5. மனுதாரர்க்கு வாழ்க்கை பொருளுதவி கொடுக்க நீங்கள் கடமைப்பட்டவர் என்றால் சரிதான். (மனுதாரர்க்கு குடும்ப வன்முறை தடுப்பு சட்டத்தின் கீழ் பாதுகாப்பு வழங்க வேண்டும்)

சாட்சியம் முடிவுற்ற நேரம் 12.00